தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

சுருக்கம்

த.கு.வ.வாரியம் . பயிற்சிமையம் - நான்காம் மாடியில் அமைக்கப்பட்டுள்ள அறைத் தொகுதி - கட்டணவீதம் - ஒப்புதல் வழங்குவது தொடர்பாக.

---

வாரிய எண்.364 நாள்:4.12.96

வாரிய தீர்மான எண்.51, நாள் 26.11.96.

...

வாரியத்தில் முதன்மை பயிற்சி மையம் எட்டு அறைத் தொகுதிகளுடன் வாரிய வளாகத்தில் நான்காம் மாடியில் உலகவங்கி நிதி ஆதாரத்துடன் அமைக்கப்பட்டுள்ளது. தற்பொழுது வாரியப்பயிற்சி நிகழ்ச்சிநிரல் புதிதாக கட்டப்பட்டுள்ள இந்தப்பயிற்சி மையத்தில் நடைபெற்று வருகின்றது. இங்கு அமைக்கப்பட்டுள்ள அறைத்தொகுதிகளை பயிற்சி நிரலில் பங்கேற்பவர்களுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டுமாயின், இந்த அறைகளுக்கு கட்டண வீதம் பட்டியல் நிர்ணயம் செய்யப்பட்டு மேற்படி அறைகளுக்கான கட்டணத்தை, அறையினை உபயோகப்படுத்தும் அலுவலர்களிடம் இருந்து வசூலிக்கப்படவேண்டும்.

கீழ்க்கண்ட கட்டணவீதத்தை நிர்ணயம் செய்வதற்காக வாரியக்குழு கூட்டத்தில் ஒரு கருத்துரு வைக்கப்பட்டது.

அறையின் கட்டணவீதம்:

ரு 50 ஒரு நபர் ஒரு நாள் தங்கலுக்கு

ரு 100 இரு நபர் ஒரு நாள் தங்கலுக்கு

வாரியக்குழுமம் மிகுந்த கவனத்திற்குப்பிறகு மேலே கூறப்பட்டுள்ள வாரிய தீர்மானத்தில் வாரிய பயிற்சி மையத்தில் அமைக்கப்பட்டுள்ள அறைகளுக்கு கீழ்கண்ட கட்டண வீதம் நிர்மாணிக்கலாம் என்று தீர்மானித்துள்ளது.

1. ஒருநபர் தங்கலுக்கு ஒருநாளைக்கு ரு 50/-
2. இருநபர் தங்கலுக்கு ஒரு நாளைக்கு ரு100/-

ஆதலால் வாரிய குழுமம் வாரிய பயிற்சி மையத்தில் அமைக்கப்பட்டுள்ள அறைகளுக்கு கீழ்க்கண்ட கட்டண வீதம் வசூலிக்க ஆணையிடுகிறது.

1. ஒருநபர் தங்கலுக்கு ஒரு நாளைக்கு ரு 50/-
2. இருநபர் தங்கலுக்கு ஒரு நாளைக்கு ரு100/-

/வாரிய ஆணையின்படி/

எல்.பழமலை,
நிர்வாக இயக்குநர்.

பெறுநர்:
இணைத்தலைமைப்பொறியாளர்(ஆ, அ&ப)/தகுவவாரியம், சென்னை-5.
நகல்: அனைத்து தலைமைப்பொறியாளர் & மேற்பார்வைபொறியாளர், தகுவவாரியம்.
நகல்: முதன்மை தணிக்கை அலுவலர் தகுவவாரியம், சென்னை-5,
நகல்: அனைத்து பிரிவு அலுவலர்களுக்கு, தகுவவாரியம், சென்னை-5.
நகல்: உள்ளூர் தணிக்கைபிரிவு/தகுவவாரியம், சென்னை-5.

/உத்திரவின் படி அனுப்பப்படுகிறது/

இணைத்தலைமைப் பொறியாளர்,
(ஆ, அ&ப) தகுவவாரியம்,
சென்னை-600 005.

9.12.96